இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 256 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 14 – திங்கள்கிழமை 27 ஏப்ரல் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 256 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 14 - Monday 27 April 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## சட்டமன்றத் தேர்தல்:

# தி.மு.க.வின் வெற்றி வாய்ப்பு சூப்பர்!

### மதுரை விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!



மதுரை, ஏப். 27 -

**“நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கழகக் கூட்டணியின் வெற்றி வாய்ப்பு சூப்பராக உள்ளது” என்று கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும்போது தெரிவித்தார்.**

சட்டப்பேரவைத் தேர்தல் முடிவடைந்த நிலையில் ஓய்வெடுப்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடைக்கானல் செல்கிறார்.

இதற்காக சென்னை விமான நிலையத்தில் இருந்து தனி விமானம் மூலம் குடும்பத்துடன் மதுரை வந்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

அப்போது மதுரை விமான நிலையத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் செய்தியாளர்கள், ‘வெற்றி வாய்ப்பு எப்படி உள்ளது?’ என்று கேள்வி எழுப்பினர்.

அதற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ‘வெற்றி வாய்ப்பு எங்களுக்குத்தான்’ என்பதுபோல ‘தம்ப்ஸ் அப்’ காட்டிச் சென்றார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நடந்து முடிந்துள்ள நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஓய்வு எடுப்பதற்காக 5 நாட்கள் பயணமாக தனது குடும்பத்துடன் நேற்று முன்தினம் கொடைக்கானல் சென்றார்.

இதற்காக நேற்று முன்தினம் காலை சென்னையில் இருந்து தனி விமானத்தில் குடும்பத்தினருடன் மதுரை வருகை தந்தார். அங்கிருந்து கார் மூலம் கொடைக்கானலுக்குச் சென்று அங்கு தனியார் ஹோட்டலில் தங்கினார்.

இதேபோல், கடந்த 2021ல் சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் 2024ல் மக்களவைத் தேர்தல் முடிவடைந்ததும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது குடும்பத்துடன் கொடைக்கானல் வந்து தங்கி ஓய்வெடுத்துவிட்டு சென்னை திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது அதேபோல் ஓய்வெடுக்க கொடைக்கானல் வருகிறார். ஓய்வுக்காக செல்வதால், கட்சியினர் யாரும் முதல்வரைச் சந்திக்க அனுமதி இல்லை என்றும் தி.மு.க. நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

## சிவகங்கை மாவட்டத்தில் 76.44 சதவீதம் வாக்குப் பதிவு!

சிவகங்கை, ஏப்.27 -

சட்டமன்றத் தேர்தலில் சிவகங்கை மாவட்டத்தில் 76.44 சதவீதம் வாக்குப்பதிவாகியுள்ளது. காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் 73.92 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது.

திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 78.98 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது. சிவகங்கை சட்டமன்றத் தொகுதியில் 75.56 சதம் வாக்குகள் பதிவாகியுள்ளது.

மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில் 77.18 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது.

## இராமநாதபுரம் மாவட்டத்தில் 77 சதவீதம் வாக்குப் பதிவு!

இராமநாதபுரம், ஏப்.27 -

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளில் மொத்தமாக 11,23,029 வாக்குகள் உள்ள நிலையில் 8,67,844 வாக்குப்பதிவாகியுள்ளது.

இது 77.01 சதவீதம் ஆகும்.

பரமக்குடி தொகுதியில் 79.61 சதவீதம், திருவாடானையில் 77.08 சதவீதம், இராமநாதபுரத்தில் 75.37 சதவீதம், முதுகுளத்தூரில் 76.62 சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளன.

## நீண்ட நேரம் காத்திருந்து வாக்குகளைப் பதிவு செய்த வாக்காளர்கள்!

தூத்துக்குடி, ஏப்.27 -

ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வாக்குப்பதிவு இயந்திரம் திடீரெனப் பழுதானதால் வாக்காளர்கள் நீண்ட நேரம் காத்திருந்து இரவு 9 மணி வரை தங்களது வாக்குகளைப் பதிவு செய்தனர்.

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் தொகுதிக்கு உட்பட்ட வடக்கு இலந்த குளம் கிராமத்தில் உள்ள வாக்குச் சாவடியில் வியாழன் அன்று காலை முதல் விறுவிறுப்பாக வாக்குப்பதிவு நடைபெற்று வந்தது. ஆனால், மாலை 5 மணி அளவில் எதிர்பாராதவிதமாக அங்குள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) பழுதானது.

இதனால் வாக்களிக்க வந்த பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை ஏற்பட்டது. இயந்திரத்தைச் சரிசெய்யும் பணியில் அதிகாரிகள் உடனடியாக ஈடுபட்டனர். எனினும், வாக்குப்பதிவு முடியும் நேரமான மாலை 6 மணி நெருங்கியதால், வரிசையில் நின்றிருந்த சுமார் 300க்கும் மேற்பட்ட வாக்காளர்களுக்குத் தேர்தல் விதிமுறைப்படி டோக்கன்கள் வழங்கப்பட்டன. பின்னர் வாக்குச்சாவடியின் பிரதான நுழைவாயில் கதவுகள் மூடப்பட்டன. தொழில்நுட்ப வல்லுநர்கள் மூலம் இயந்திரம் சரி செய்யப்பட்ட பிறகு, இரவு 7 மணி அளவில் மீண்டும் வாக்குப்பதிவு தொடங்கியது. டோக்கன் பெற்ற வாக்காளர்கள் அனைவரும் வரிசையாக வந்து வாக்களித்தனர். இந்த நடைமுறை முழுவதும் நிறைவடைய இரவு 9 மணி ஆனது.

### சென்னை - நெல்லை இடையே

## சிறப்பு மெமு ரயில் இயக்கம்!

### தெற்கு ரயில்வே தகவல்!

திருநெல்வேலி, ஏப். 27 -

கோடை காலத்தை முன்னிட்டு பயணிகளின் கூட்ட நெரிசலைத் தவிர்ப்பதற்காக, சென்னை மற்றும் நெல்லை இடையே முன்பதிவில்லாத சிறப்பு மெமு (MEMU) எக்ஸ்பிரஸ் ரயில் இயக்கப்பட்டதாகத் தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இந்தச் சிறப்பு ரயில், சென்னை எழும்பூரில் இருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை (ஏப்ரல் 25) இரவு 11.50 மணிக்கு புறப் பட்டு, மறுநாள் காலை 10.45 மணிக்கு நெல்லையை சென்றடைந்தது.

அதேபோல், மறுமார்க்கத்தில் நெல்லையிலிருந்து ஏப்ரல் 26ம் தேதி மதியம் 1.20 மணிக்கு புறப்பட்டு, அன்று இரவு 11.45 மணிக்கு தாம்பரத்தை சென்றடைந்தது. இந்த ரயில் தாம்பரம், செங்கல்பட்டு, விழுப்புரம், விருத்தாசலம், அரியலூர், ஸ்ரீரங்கம், திருச்சி, திண்டுக்கல், கொடைக்கானல் ரோடு, மதுரை, விருதுநகர், சாத்தூர் மற்றும் கோவில்பட்டி ஆகிய ரயில் நிலையங்களில் நின்று சென்றது எனத் தெற்கு ரயில்வேயின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நொய்டா, காஜியாபாத், டெல்லி தொழிலாளர்கள் மீது கொடூர அடக்குமுறை!

## டெல்லி நாடாளுமன்ற வீதியில் இடதுசாரிக் கட்சிகள் ஆர்ப்பாட்டம்!

புதுடெல்லி, ஏப். 27 -

குறைந்தபட்ச ஊதியம், பணிப் பாதுகாப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து நொய்டா, காஜியா பாத் மற்றும் டெல்லி தொழிற்பேட்டை பகுதிகளில் தொழிலாளர்கள் போராடிவரும் நிலையில், அவர்களுக்கு ஆதரவாக இடதுசாரிக் கட்சிகள் சார்பில் வெள்ளிக்கிழமை (ஏப். 24) அன்று புதுடெல்லி நாடாளுமன்ற வீதியில் கூட்டு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (எம்எல்), புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி, அகில இந்திய பார்வர்ட் பிளாக் ஆகியவை இணைந்து நடத்திய இந்த ஆர்ப்பாட்டத் தில், நொய்டா, காஜியாபாத் மற்றும் டெல்லி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பெருந்திரளான தொழிலாளர்களும் தொழிற்சங்கத் தலை வர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்தத் தலைவர் சுபாஷினி அலி, ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றுப் பேசுகையில், தொழிலாளர்கள் மத்தியில் குறிப்பாக நொய்டா கிரேட்டர் நொய்டா, காஜியா பாத் மற்றும் குருகிராம் பகுதிகளில் தொழிலாளர்கள் நிம்மதியை இழந்திருப்பதாகவும், குறைந்தபட்ச ஊதியம் மறுக்கப்படுதல், ஒப்பந்த தொழிலாளர் முறை விரிவாக்கம், பாதுகாப்பற்ற பணிச்சூழல்கள் மற்றும் தொழிலாளர் சட்டங்களின் அப்பட்டமான மீறல்கள் ஆகியவையே இதற்கான முதன்மைக் காரணங்கள் என்றும் கூறியுள்ளார்.

ஊதிய உயர்வு, பணி நிரந்தரம், சிறந்த பணிச் சூழல்கள் போன்ற தங்களின் நியாயமான கோரிக்கைகளுக்காகத் தொழிலாளர்கள் ஒன்று திரளும் போதெல்லாம், காவல்துறை நடவடிக்கை, கைதுகள் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்குத் தடை போன்ற அடக்குமுறைகளையே மாநில அரசுகள் ஏவிவிடுவதாக குற்றம்சாட்டினார். தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளைச் சட்டம் - ஒழுங்குப் பிரச்சனைகள் என்று முத்திரை குத்தி அடக்க முடியாது என்றும் அவர் எச்சரித்தார்.

பிஎம் டெல்லி மாநிலச் செயலாளர்), அமர்ஜித் கவுர் (ஏ.ஐ.டி.யு.சி.), ஸ்வேதா ராஜ் (சி.பி.ஐ. எம்.எல்), ஆர்.எஸ். டாகர் (புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி) ஆகிய தலைவர்களும் உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில், டெல்லி தொழிற்பேட்டைப் பகுதிகளில் அதிகரித்து வரும் தொழிலாளர் அமைதியின்மை குறித்தும், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் ஒடுக்குமுறைகள் குறித்தும் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தும் விரிவான மனு ஒன்று, பிரதமர், உள்துறை அமைச்சர் மற்றும் மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஆகியோரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

“கைது செய்யப்பட்டுள்ள அனைத்துத் தொழிலாளர்களையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

தொழிலாளர்கள் மீது புனையப்பட்டுள்ள பொய் வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும். குறைந்தபட்ச ஊதியம் அளித்திட வேண்டும். தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்திட வேண்டும். ஒப்பந்த ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

தொழிற்பேட்டைகளில் இயங்கும் தொழிலாளர் நலத்துறை பொறுப்புடன் செயல்படுவதை உத்தரவாதப்படுத்திட வேண்டும்” என்று அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டு இருந்தது.

கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால் போராட்டங்கள் தீவிரமாகும் என்றும் இடதுசாரிக் கட்சிகள்சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

## மேற்கு வங்க தேர்தல் வெற்றிக்குப் பிறகு டெல்லியைக் கைப்பற்றுவேன்!

### மம்தா பானர்ஜி உறுதி!

கொல்கத்தா, ஏப். 27 -

மேற்கு வங்க தேர்தல் வெற்றிக்கு பிறகு டெல்லியை கைப்பற்றுவேன் என்று மம்தா பானர்ஜி கூறினார்.

மேற்கு வங்க சட்டப் பேரவைக்கு முதல்கட்ட தேர்தல் ஏப்.23 அன்று முடிவடைந்தது.

இதையடுத்து வரும் 29ம் தேதி நடைபெறும் இரண்டாம் கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் அனல் பறக்கிறது. முதல் கட்டத் தேர்தலில் 92 சதவீதத்துக்கு மேல் வாக்குகள் பதிவாகி உள்ளன.



இந்நிலையில் கொல்கத்தாவின் சவுரிங்கிப் பகுதியில் திரிணமூல் காங்கிரஸ் சார்பில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் முதல்வர் மம்தா பானர்ஜி பேசியதாவது: -

பா.ஜ.க.வால் எங்களை தோற்கடிக்க முடியாது. நாங்கள் அநீதிக்கு எதிராகப் போராடுகிறோம். எங்கள் உரிமைகளுக்காகப் போராடுகிறோம். நான் வங்கத்தில் பிறந்தேன். இந்த வங்கத்திலேயே என் இறுதி மூச்சையும் விடுவேன்.

வங்கத்தில் வெற்றியை உறுதி செய்த பிறகு, நான் டெல்லியை எனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவேன். அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைப்பதன் மூலம் நான் இதைச் செய்வேன்.

எனக்கு அதிகாரப் பதவி தேவையில்லை. டெல்லியில் பா.ஜ.க. முழுமையாக தகர்க்கப்படுவதையே நான் விரும்புகிறேன்.

மேற்கு வங்கத்தில் அவர்களின் அழிவு தவிர்க்க முடியாதது. என்றாலும் டெல்லியிலிருந்தும் பா.ஜ.க. வெளியேற்றப்பட வேண்டும்.

இவ்வாறு மம்தா பானர்ஜி ஆவேசமாகப் பேசினார்.

### பறக்கும் படை சோதனையில்

## ரூ.3.97 கோடி ரொக்கம் - பொருட்கள் பறிமுதல்!

தூத்துக்குடி, ஏப்.27 -

2026 - தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலை முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள பல்வேறு இடங்களில் பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுவினர் ஏப்ரல் 23 அன்று மாலை 6 மணி வரை மேற்கொள்ளப்பட்ட அதிரடி சோதனையில், உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட சுமார் ரூ.3,97,06,126 மதிப்பிலான ரொக்கப் பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதில், கணக்கில் காட்டப்படாத மொத்த ரொக்கத் தொகையாக ரூ.3,49,32,968ம், பல்வேறு பொருட்கள் ரூ.38,42,212 மதிப்பிலும், மதுபானங்கள் ரூ.9,30,946 மதிப்பிலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலர் விஷ்ணு மகாஜன் தெரிவித்துள்ளார்.